.DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 81/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஹரிபிரகாஷ் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | |
| கிராமம் | : | | இனம் | |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 11.06.2025.

முதல் விசாரணை

நான் குட்டிய கவுண்டனூரில் வசித்து வருகிறேன். டிரைவர் வேலை செய்து வருகிறேன். கடந்த 30.09.2021 ம் தேதி சேரன் நகர் அருகில் உள்ள வெற்றி வேல் நகரில் நான் சொந்த வேலையாக சென்ற போது அங்கு 2 பெண் போலிசார்கள் கருப்புசாமி வீட்டின் அருகில் நின்று கொண்டிருந்தார்கள். அங்கு விபச்சாரம் நடந்ததாக கூறினார்கள். அப்போது போலிசார்கள் எங்களை அழைத்து வரைபடம் வரைந்ததற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும் மளிகை கடை வைத்திருக்கும் ஜோசப்பும் கையெழுத்து செய்தோம். கருப்பு சாமியின் சமையலறை மற்றும் படுக்கையறையை வரைந்து இருத்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசரில் உள்ள விவரம் தெரிந்து கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

]\ எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை

1. குட்டிய கவுண்டனூருக்கும் உடுமலைக்கும் 15 கிமீ இருக்கும

என்றால் ஆமாம். கையொப்பம் செய்த தாளில் குறிப்பிட்டு என்ன விவரம் உள்ளது என்று தெரியாது என்றால் தெரியும். படம் வரைந்து இருந்தார்கள். 60 அடி எதனை காண்பித்து மகசர் மற்றும் வரைபடத்தில் காட்டி உள்ளார்கள் என்றால் தெரியவில்லை. 40 அடி என்று எதனை காண்பித்து எழுதினார்கள் என்றால் தெரியாது. மகசரில் உள்ள விவரம் தெரியாது.

2. என்ன வேலைக்கு செல்கிறிர்கள் என்றால் டிரைவர் வேலை. எந்த கம்பெனிக்கு வேலைக்கு செல்கிறிர்கள் என்றால் SRT. வேலை நேரம் என்ன என்றால் காலை 9.00 – இரவு 9.00 மணி வரை. SRT கம்பெனி எங்குள்ளது என்றால் சிவசக்தி காலனியில் உள்ளது. டிரைவர் வேலை செய்வதால் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றாலும் முதல் விசாரணையில் சொல்லியது தவறு என்றாலும் சரியல்ல. போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு தற்சமயம் சம்பவ இடத்தில் வைத்து போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.